**தம்புள்ள பிரதேச சபை 2022**

---------------------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தம்புள்ள பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான மற்றும் செலவினக் கணக்கு, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (I) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்களிலிருந்து 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தம்புள்ள பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக் கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக் கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக் கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக் கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக் கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்,

- ஏதேனும் உரிய எழுத்து மூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்.

**1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(I)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.6 நிதிக் கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**
**1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை- |
|---|---|---|---|
| (அ) | சீகிரியா மோட்டார் வாகன நிறுத்தமிடத்தின் முன்னைய ஆண்டிற்காக பெறவேண்டிய ரூபா 575,864 தொகையான வாடகை மீளாய்வாண்டின் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டு இருக்கவில்லை | இவ்வாறான குறைபாடுகள் இடம் பெறாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும் |
| (ஆ) | சீகிரியா மோட்டார் வாகன நிறுத்தமிடத்தினை வியாபார உரித்தினை குத்தகைக்கு வழங்குவதற்கான கட்டணங்கள் பட்டியலிடப்பட்ட வருமானம் ரூபா 1,152,500 ஆல் குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | மோட்டார் கிரேடர், பெக்கோ இயந்திரம் வாடகைக்கு வழங்கும் வருமானம் ரூபா 465,305 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டு இருந்தது. | - மேற்படி - | - மேற்படி – |
| (ஈ) | மீளாய்வாண்டிற்குரிய பெறவேண்டிய ரூபா 256,110 ஆன நிலுவை சம்பளம் மீளளிப்பு தொகை கணக்கீடு செய்யப்பட்டு இருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (உ) | வங்கிக்கு நேரடியாக கிடைத்திருந்த அனுப்புகை மற்றும் கட்டண சீராக்கத்தினால் திருத்திய காசேட்டின் பிரகாரம் வங்கி மீதி ரூபா 21,800,483 ஆக இருந்த போதும் அது ரூபா 18,942,945 என ஐந்தொகையில் காண்பிக்கப்பட்ட காரணத்தினால் வங்கி மீதி ரூபா 2,857,638 ஆல குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஊ) | பொது நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள ரூபா 2,500,000 ஆன 01 ரூட் 29 பேர்ச்சுடன் கூடிய காணிப்பகுதி நிலையான சொத்துக்களின் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஒ) | மீளாய்வாண்டிற்குரிய பட்டியலிடப்பட்ட முத்திரை கட்டண வருமானம் ரூபா 677,000 தொகை குறைத்துக காண்பிக்கப்பட்டிருந்தது. | கணக்காய்வினால் சுட்டிக் காண்பிக்கப்பட்ட தவறினை ஏற்றுக்கொள்வதாக | நிலுவை வருமானம் அனைத்தும் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

**1.6.2 இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் மற்றும் அறிக்கைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 27 கணக்கு விடயங்களுக்குரிய நிதிக் கூற்றுகளின் பிரகாரம் மீதி மற்றும் அண்மித்த அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட பிரகாரம் மீதிகளுடன் ஒப்பிடும் போது ரூபா 52,573,515 ஆன இணக்கமின்மை ஒன்று இருந்தது. | எதிர்காலத்தில் அவ்வேறுபாட்டை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | கணக்கு மீதிகள் சீராக்கப்பட வேண்டும் |

**1.6.3 அதிகாரம் பெறப்படாத கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| முன்னைய ஆண்டில் நிலுவை வருமானமாக இனங்காணப்பட்ட சுற்றுலா ஹொட்டெல் அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் ரூபா 3,652,076 தொகை முறையான அங்கீகாரமின்றி பதிவழிக்கப்பட்டிருந்தது. | 2023 இன் கணக்குகளைத் தயாரிக்கும் போது மீண்டும் வருமானத்திற்கு எடுத்து சரியான நடைமுறையொன்றை எடுத்த பின்னர் பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | முறையான அங்கீகாரத்தினை பெற்ற பினன்ர் வருமானத்தை பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.6.4 தொங்கல் கணக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தொங்கல் களஞ்சிய கணக்கில் ரூபா 411,946 ஆன வரவு மீதி மீளாய்வாண்டின் போது தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை | எதிர்காலத்தில் இக் கணக்கை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | மீதிகள் இனங் காணப்பட்டு தீர்வு செய்யப்பட வேண்டும் |

### 1.6.5 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்தம் ரூபா 150,517,858 ஆன 04 கணக்கு மீதிகளுக்குரிய அட்டவணைகள், மீதி உறுதிப்படுத்தல் கடிதங்கள், சமர்ப்பிக்கப்படாமையால் திருப்திகரமாக பரீட்சிக்க முடியாது இருந்தது. . | பதிவேடுகளை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | கணக்கு மீதிகளுக்காக பதிவேடுகள் அட்டவணைகள் தயாரிக்கப்பட வேண்டும் |

### 1.7 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன

| | சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக குடிரசின் நிதிப்பிரமாணம் நி.பி 571(3) | முன்னைய ஆண்டுகளுக்குரிய இனங் காணப்பட வேண்டிய ரூபா 1,108,150 ஆன 05 ஏனைய வைப்பு மீதிகள் விடுவிக்கப்பட்டிருக்கவில்லை | 2023 இன் கணக்குகளைத் தயாரிக்கும் போது திரண்ட நிதியத்திற்கு சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஆ) | 2017 திசெம்பர் 21 ஆம் திகதிய 02/2017 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | தம்புள்ளை பிரதேச சபையால் பயன்படுத்தப்படுகின்ற 03 வாகனங்கள் மற்றும் 02 உழவு இயந்திர டேலர்களின் உரித்தினை கைஏற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக | சுற்றறிக்கை அறிவுறுத்தலின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (இ) | குறித்த 2022 ஜனவரி 25 ஆம் திகதி 04/2022 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் 2 (அ) பந்தி | ஓட்டத்தில் ஈடுபடுத்த முடியாது காணப்படுகின்ற 02 வாகனங்கள் கைதவிர்ப்பு செய்யப்பட்டிருக்கவில்லை | கைது அளிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | சுற்றறிக்கை அறிவுறுத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 15,101,567 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 18,118,670 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 2,501,100 | 165,890 | 165,890 | - | 2,501,100 | - | - | - |
| (ii) | வாடகை | 29,665,000 | 3,099,407 | 2,996,617 | 1,687,293 | 22,680,000 | 1,125,320 | 1,125,320 | 1,584,503 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 23,699,200 | 10,359,585 | 9,280,683 | 1,419,294 | 34,289,000 | 10,583,029 | 5,574,694 | 7,309,271 |
| (iv) | நீதிமன்ற தண்ட பணம் | 13,753,500 | 10,592,041 | 8,515,941 | 2,076,100 | 14,030,500 | 8,650,550 | 4,440,050 | 4,210,500 |
| (v) | முத்திரைக் கட்டணங்கள் | 14,255,038 | 9,242,760 | 7,014,260 | 7,426,730 | 7,542,578 | 8,709,000 | 8,709,000 | 21,455,700 |
| (vi) | ஏனைய வருமானம் | 14,255,038 | 7,184,668 | 6,635,468 | 1,071,700 | 29,075,130 | 1,103,000 | 790,000 | 660,500 |
| | | 98,128,876 | 40,644,351 | 34,608,859 | 13,681,117 | 110,118,308 | 30,170,899 | 20,639,064 | 35,220,474 |

#### 2.2.2 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சுற்றுலா சபையில் பதிவு செய்யப்பட்ட 07 ஹோட்டல்களில் 1 ஆண்டு முதல் 04 ஆண்டு காலப்பகுதியில் கணக்குகளை பெற்று அனுமதி பத்திர | நிறுவனங்களுக்காக சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் |

| | | |
|---|---|---|
| கட்டணங்களை அறிவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருகக்கவில்லை. | | வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2015 ஏப்ரல் 13 ஆம் திகதி பிரதேச சபையின் கெப் வண்டி விபத்துக்கு உட்பட்டதற்குரிய உரியதாக வழங்கப்பட்ட நி.பி 104(4) பரிசோதனை அறிக்கையின் பிரகாரம் தலைவருக்கு ரூபா 2,367,534 தொகையும் சாரதிக்கு ரூபா 789,178 ஆன நட்டத்தை அறவிடுவதற்கு பரிந்துரைக்கப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டின் இறுதி திகதி வரையில் நட்டம் அறவிடப்பட்டு இருக்கவில்லை. விபத்து காரணமாக ரூபா 2,474,868 ஆன மேலதிக கிரயம் ஒன்று செலவிடப்பட்ட போதும் அது தொடர்பாக இதுவரை தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு இருக்கவில்லை. | அந்நட்டத்தை அறவிடுவதற்காக தம்புள்ள பிரதேச சபையின் முன்னால் தலைவரால் மேன்முறையோடு என்று சமர்ப்பிக்கப்பட்டுள்ள தாகவும் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு அதன் மூலம் கிடைக்கும் தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாகவும். | நிதிப் பிரமாணங்களின் பரிசோதனை அறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2016 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பொருள் மெய்மையாய்வு அறிக்கையில் வெளிப்படுத்தப்பட்ட ரூபா 461,654 ஆன பொருள் பற்றாக்குறை தொடர்பாக 2022 செப்டம்பர் 09 ஆம் திகதி உள்ளூராட்சி மன்ற ஆணையாளரால் மீண்டும் நி.பி 104(4) பரிசோதனை ஒன்று மேற்கொள்ளுமாறு குறிப்பிடப்பட்டிருந்த போதும் 2023 ஜனவரி 13 ஆம் திகதி வரையிலும் அப் பரிசோதனை நடத்தப்பட்டு இருக்கவில்லை. | இரண்டு உத்தியோகத்தர்கள் பரிசோதனை ஒன்றை கோரியதாகவும் அந்த கணிப்பீடு இதுவரை மேற்கொள்ளப்படவில் லை என்பதாகவும் ஓய்வு பெற்ற மூன்று பேரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய தொகையை அறவிடுவதற்கு உதவி ஆணையாளிடம் ஆலோசனை கோரப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தம்புள்ள பிரதேச சபையால் நிர்மாணிக்கப்பட்டிருந்த 12 சமூக மண்ட கட்டிடங்களின் பெறுமதி மற்றும் 04 | உரிய சொத்துக்களை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | மதிப்பிடப்பட்ட பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காணிகளின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு 5 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட காலமாக பெறவேண்டிய 4 கணக்கு மீதிகளின் மொத்தம் 5,019,988 ஆக இருந்தது. | நிலுவையாக இருந்த ஏனைய வருமானங்கள் தொடர்பாக தகவல்களை கண்டுபிடிக்க முடியாததாகவும் தம்புள்ள மாநகர சபையிடமிருந்து பெறவேண்டிய தொகை தொடர்பாக மாநகர சபைக்கு அறிவிக்கப்பட்டு அனுப்பியுள்ளதுடன் நடைமுறை கணக்கின் மீதியை விரைவில் சீராக்குவதாக. | பெற வேண்டிய கணக்கு மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | சபை பயன்படுத்துகின்ற 16 மயானங்கள் மற்றும் 05 காணிகளின் உரித்தை சபைக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை. | 16 மயானங்கள் மற்றும் 05 காணிகளின் உரித்தினை பிரதேச சபைக்கு கையளிக்கும் இணக்கப்பாட்டை உள்ளூராட்சி மன்ற ஆணையாளரால் பிரதேச செயலாளருக்கு கடிதத்தின் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாக. | உரித்த கையேற்க வேண்டும். |
| (ஈ) | பிரதேச சபையின் மோட்டார் கிரேடர் செயற்பாட்டில் காணப்பட்ட போதும் அப்பே கம அபிவிருத்தி திட்டத்தின் கீழ் பிரதேச சபையால் செயற்படுத்தப்பட்ட 04 செயற்திட்டங்களுக்காக தனியார் நிறுவனம் ஒன்றிடம் இருந்து மோட்டார் கிரேடர் ஒன்று வாடகைக்கு பெறப்பட்டு ரூபா 545,500 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | சபையின் மோட்டர் கேடர் அச்சந்தர்ப்பத்தில் வெளி தரப்பினருக்கு வாடகைக்கு வழங்கப்பட்ட காரணத்தினால் வேறொரு மோட்டார் கேடரை வாடகைக்கு பெற்றுக் கொள்ள நேர்ந்ததாக. | சபையில் நிர்மாணங்களுக்காக சபையின் இயந்திர உபகரணங்கள் பயன்படுத்தப்பட வேண்டும். |

**3.3 செயற்பாட்டு வினைத்திறனின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2015 முதல் 2022 ஆம் ஆண்டு வரையான காலப் குதியில் 396 விண்ணப்பங்களுக்கு கட்டிட அபிவிருத்தி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டு அக்காலப் பகுதியில் 42 இணக்கச் சான்றிதழ்கள் போன்ற குறைந்த அளவில் வழங்கப்பட்டிருந்தன. | நிர்மாணங்களை ஆராய்ந்து பார்த்து கோவைகள் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கு கையளிக்கப்பட்டுள்ளதாகவும் விண்ணப்பதாரர்களுக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாக. | இணக்கச் சான்றிதழ்கள் வழங்கப்பட வேண்டும். |

### 3.4 சர்ச்சைக்கரிய கொடுக்கல் வாங்கல்கள

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபை தலைவரால் பயன்படுத்தப்படுகின்ற கெப் வண்டி விபத்துக்கு உட்பட்டு திருத்தம் செய்யப்பட்டு 2022 மார்ச் 05 தேதி முதல் பயன்பாட்டுக்கு எடுக்கப்பட்டிருக்கையில் 2022 மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களுக்காக மொத்தம் ரூபா 100,000 ஆன போக்குவரத்து படிகள் பெற்றுக் கொள்ளப்பட்டு இருந்தன. | அம்பத்தன்ன பிரதான பொறியாளரால் இரண்டு சந்தர்ப்பங்களில் 07 நாட்கள் மற்றும் 11 நாட்கள் பரீட்சார்த்த ஓட்டத்தில் ஈடுபடுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளதால் அக்காலப்பகுதியில் மணித்தியாலத்துக்கு 50 கிலோமீட்டர் வேகத்தில் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் அக்காலப்பகுதியில் தலைவரால் PE-0390 ஆம் இலக்க வண்டி பயன்படுத்தப்பட்டுள்ளதாக அறியத் தருகிறேன். | தலைவரால் கடமை நடவடிக்கைகளுக்காக வண்டியை பயன்படுத்தியதாக நாளாந்த ஓட்டக் குறிப்புகளின் பிரகாரம் உறுதிப்படுத்தப்படுவதால் படிகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப் பட்ட ரூபா 44,473,000 ஆன 03 உழவு இயந்திரங்கள் 01 ஆண்டு முதல் 04 ஆண்டுகள் வரை விளைவற்ற வகையில் குறைப் பயன்பாடுடன் காணப்பட்டன. | சாரதி வெற்றிடங்கள் காரணமாக பயன்பாட்டுக்கு எடுக்க முடியாது என்பதால் ஒரு உழவு இயந்திரத்தை கடுகண்ணாக நகர சபைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதாக. | வாகனங்கள் பயன்படுத்தப்பட வேண்டும் |

### 3.6 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் உள்ளவாறான பதவியணியுடன் ஒப்பிடும் போது 04 இரண்டாம் நிலை பதவிகளுக்குரிய 06 உத்தியோகத்தர்களுக்கரிய வெற்றிடங்களும் 08 ஆரம்ப நிலை பதவிகளுக்குரிய 12 வெற்றிடங்களும் சுகாதார பதவிகளுக்குரிய 03 உத்தியோகத்தர்கள் மிகையாக உள்ளனர் | வெற்றிடங்களை நிரப்புவதற்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளன. கௌரவ ஆளுநர் அவர்களின் அங்கீகாரத்தை பெற்றுக்கொண்டு தற்போது ஒப்பந்த அடிப்படையில் 06 சுகாதாரத் தொழிலாளர்கள் ஆட்சேர்க்கப்பட்டுள்ளதாக | வெற்றிடங்களை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 இன் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி சட்டத்தின் நியதிகளின் பிரகாரம் சபையினால் முறையாக நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகள் இனங்காணப்பட்டு செயற்படுத்தப்பட் டிருக்கவில்லை. | நூலகங்களை அபிவிருத்தி செய்தல் சுகாதார பாதுகாப்பான நீரை அண்மித்த வசதிகளை வழங்குதல் (ஆரோக்கியம் மலசல கூட நிர்மாணம்) வீதி அபிவிருத்தி போன்ற நோக்கங்களுக்கு உரிய செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டுள்ளதாக. | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |